முருகப்பெருமான் துணை

**மகான் வாயிலார் நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.08.2022**, திங்கட்கிழமை

1. தீவினை சுட்டெரிக்க வந்த
தேசிகனே ஞானச் சுடரே
பாவிகளை மீட்டு கலியினில்
பரோபகார சிந்தை பெறச்செய்து
2. செய்து மீட்க சித்திகள் அருளும்
சுப்பிரமண்யரின் மகா சூட்சுமமே
அய்யமற உன் பெருமை கூறி
அறிவிப்பேன் அருளாசி தன்னை
3. தன்னையே வாயிலார் நாயனாரும்
தக்கதொரு சுபகிருது யாளி திங்கள்
நன்னயமாய் சஷ்டி திகதி சோமவாரம்
**(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 06 நாள், 22.08.2022 திங்கட்கிழமை)**
நாட்டிடுவேன் உலகோர் நலம்பெற
4. நலம்தரும் சன்மார்க்க ஞான
ஞானபண்டிதன் நெறிமுறையை
பலம்தரும் வண்ணம் பற்றி
பாருலகில் மக்கள் தொடர
5. தொடரவே வதையான சகல
தீவினைகளும் விலகி நின்று
இடரில்லாத பெருவாழ்வுமாக
எல்லா வரமும் வந்தடையும்
6. அடையவே ஆக்கினை தரும்
அனைத்து கட்டங்களுமே
சுடராம் சரவண ஜோதி வழிபாட்டில்
சுக்குநூறாகி அகன்றோடும்
7. ஓடுமே கோளிடர் ஊழ்வினை
ஓமல் ஏவல் வஞ்சம் பிணியும்
ஓடுமே கண்காணாத வண்ணம்
ஓங்காரன் நாமசெபம் போற்ற
8. போற்றவே எங்கும் எதிலும்
புண்ணிய பலமாக மிஞ்சி
ஆற்றல்பட தருமம் செய்யும்படி
அதீத வளர்ச்சி மாற்றம் கூடும்
9. கூடவே தன்னை அறிதலும்
குருவின் பலம் அறிதலுமான
ஈடேற்றம் தேற்றம் மிகுந்து
இந்தபிறவி நோக்கமும் தெளிந்து

10. தெளிந்துமே நிலைகள் உயர்ந்து
தேசிகனால் ஞானபலம் கூடி
அழிவிலா ஞானிகள் ஆவர்
அகிலம் மாற்றும் சக்தி பெருகி

11. பெருகியே அரங்கன் அவதார
பெருமைபாடி பேருலகை மாற்றி
முருகப்பெருமான் அருள்தயவுபட
முழுமையான ஞான ஆட்சிதருவர்
அருளாசி முற்றே

—சுபம்—